நாள்:15.05.2019

செ.வெ.எண்:24

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

134.அரவக்குறிச்சி சட்டமன்ற இடைத்தேர்தல் வருகிற 19.05.2019 அன்று நடைபெறவுள்ளதால் தேர்தல் நடத்தை விதிகளின் படி , வரும் 17.05.2019 அன்று மாலை 6.00 மணியுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவடைவதால் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் நடத்தை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்கண்டுள்ள நடைமுறைகளை கடைபிடிக்க கரூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., கேட்டுக் கொள்ளகிறார்.

- ❖ தேர்தல் தொடர்பான பொது கூட்டங்கள், ஊர்வலங்களை நடத்தவோ, அப்பொதுக்கூட்டங்களில் பங்கேற்கவோ கூடாது. மேலும், தேர்தல் தொடர்பான தகவல்களை ஒளிப்பதிவிலோ, தொலைக்காட்சியிலோ அல்லது எவ்வித மின்னணு தகவல் தொடர்பு முறையிலோ காட்சிப்படுத்தக்கூடாது.
- ❖ இசை நிகழ்ச்சிகள், அல்லது எவ்வித பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மூலமாகவோ தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடக்கூடாது. தேர்தல் நடத்தை விதிகளை மீறினால் 2 வருட சிறை தண்டனை /அபராதம் அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.
- ❖ தொகுதிக்கு வெளியிலிருந்து அழைத்து வரப்பட்ட, அத்தொகுதியில் வாக்காளராக இல்லாத அனைத்து அரசியல் தலைவர்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள் 17.05.2019 அன்று மாலை 06.00 மணிக்கு மேல் உடனடியாக தொகுதியை விட்டு வெளியேற வேண்டும்.
- ❖ 17.05.2019 அன்று மாலை 06.00 மணிக்கு மேல் இயக்கப்படும் அனுமதி வழங்கப்பட்ட வாகனங்கள் இயக்க அனுமதி இல்லை. மீறினால் சட்டப்படி நடவடிக்கைக எடுக்கப்படும்.
- ❖ மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 126(1)(பி) –ன் படி தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்புகளோ, வாக்கெடுப்புகளோ, கணக்கெடுப்புகளோ தேர்தல் நாளுக்கு 48 மணிநேரத்திற்கு முன்பாக வெளியிட தடை செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,கரூர்.